**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.304/2020**

**வா.சா. – 2 – இளவழகன்**

**நாள். 20.09.2023**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி எனது மகன். வழக்கு சம்பந்தமான விபரங்களை எங்களது வழக்கறிஞரிடம் நானும், வாதியும் சேர்ந்து சென்று, கலந்து பேசி சொன்னோம். வாதி தாக்கல் செய்த பிராதை நான் படித்து பார்த்தேன். வழக்குரையில் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் 1983ல் பணிக்கு சேர்ந்து 2019ல் பணி ஓய்வு பெற்றேன். என் மகன் (வாதி) கல்லூரி படிப்பை 2013ல் முடித்தார். என் மகனின் கல்விச்செலவை நான் தான் பார்த்துக்கொண்டேன். என் மகன் எந்த ஆண்டு வேலை பார்க்க ஆரம்பித்தார் என்றால் 2014 முதல் தொழில் செய்து வந்தார். பிரதிவாதி எனக்கு நேரடியாக அறிமுகம் இல்லை. பிரதிவாதியை சின்னாளபட்டி ராமசாமி என்பவர் மூலமாக தான் தெரியும். மேற்படி ராமசாமி 50 ATS நகர், சின்னாளபட்டி என்ற முகவரியில் வசித்து வருகிறார். அவரை கடந்த 15 வருடங்களாக எனக்கு தெரியும். பிரதிவாதியை எந்த தேதியில் ராமசாமி என்னிடம் அறிமுகம் செய்தார் என்றால் 2016 பிப்ரவரி மாதம் அறிமுகம் செய்தார். பிரதிவாதியின் கணவரிடம் நான் பேசியுள்ளேன். வழக்கு சொத்தை 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்று பார்த்தேன். வழக்கு சொத்தை சர்வேயர் வைத்து அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தை யாரிடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் அவரது பெயர் தெரியாது. அந்த ஆவணங்களை நான் படித்து பார்த்தேன். தாவா சொத்து அப்போது காலி இடமாக இருந்தது. தாவா சொத்து 1650 சதுர அடி அளவு உள்ளது. தாவா சொத்தில் முதல் மாடி உள்ளது. தாவா சொத்தில் இரண்டாவது மாடி உள்ளது, அதில் வீடு உள்ளதா என்றால் ரூம் உள்ளது. முதல் மாடியின் விஸ்தீரணம் 900 சதுர அடி அளவு உள்ளது. இரண்டாவது மாடியில் கட்டிடத்தின் விஸ்தீரணம் 300 சதுர அடி அளவு உள்ளது. அந்த வீடு பிரதிவாதி மற்றும் அவரது கணவரால் கட்டப்பட்டது. பிரதிவாதியின் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் டிராவல்ஸ் வைத்து நடத்துகிறார். தாவா சொத்தில் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். பிரதிவாதியின் மகன் பெயர் தெரியாது. பிரதிவாதியின் மகனுக்கு தற்போது 15 வயது இருக்கும். தாவா சொத்தில் உள்ள வீடு எப்போது கட்டி முடிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் மூலபத்திரத்தை நானோ, வாதியோ பிரதிவாதியிடமிருந்து பெறவில்லை. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் வீடு புரோக்கர் மூலமாக

பிரதிவாதி எனக்கு பழக்கம் என்று சொல்லியுள்ளேன், அந்த வீடு புரோக்கர் பெயர் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சொந்த ஊர் தஞ்சாவூர். தஞ்சாவூரில் எனக்கு வீடு, நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். தஞ்சாவூரில் உள்ள வீடு, நிலங்களை வங்கியில் வைத்து கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு வங்கியில் அடமான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது வரை அந்த கடன் தொகை தீர்க்கப்படவில்லை என்றால் அந்த கடன் 2023 ம் ஆண்டு தான் வாங்கியுள்ளோம். நானும், வாதியும் 2023 க்கு முன் வங்கியில் கடன் பெற்று, அதற்கு சொத்தை அடமானம் வைத்துள்ளோம் என்றால் வேறு சொத்தை வைத்துள்ளோம். கிரைய ஒப்பந்தத்திற்கான முத்திரைத்தாள்கள் 11.03.2016 ம் தேதியில் வாங்கப்பட்டது. எந்த தேதியில் தாவாசொத்தை கிரையம் வாங்க வேண்டும் என்று நானும், வாதியும் சேர்ந்து முடிவு செய்தோம் என்றால் 12.03.2016 ல் முடிவு செய்தோம். கிரைய ஒப்பந்த ஆவணம் என் முன்னிலையிலோ, வாதி முன்னிலையிலோ தயார் செய்யப்படவில்லை. கிரைய ஒப்பந்த ஆவணம் எங்கு வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த ஆவணம் தயார் செய்த விபரம் பற்றி என் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில், பிரதிவாதியின் கணவர் என்னிடம் ரூ.5 லட்சம் கடனாக வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்ற விபரம் தெரிந்துகொண்டேன். பிரதிவாதியின் கணவர் திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காலக்கெடு 3 ஆண்டுகள் போடப்பட்டுள்ளது. அந்த 3 வருட காலக்கெடுவிற்குள் பாக்கி கிரைய தொகை பிரதிவாதியிடம் செலுத்த வசதி இருக்கிறது என்பது பற்றி அறிவிப்பு ஏதும் நான் அனுப்பவில்லை என்றால் நான் அனுப்பவில்லை. நேரில் போய் கேட்டேன். என் மகனுக்கு பாக்கிதொகை செலுத்தும் அளவிற்கு 3 ஆண்டு காலத்திற்குள்ளாக வசதி இருந்தது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் ஏதும் தாக்கல் செய்யவில்லை. நானும், என் மகனும் ஒரே வீட்டில் தான் குடியிருக்கிறோம் என்றால் எனக்கு இரண்டு மகன்கள். இரண்டு மகன்கள் வீட்டிலும் மாதம் ஒரு வீடு என்று வசித்து வருகிறேன். என் மகன் வழக்குரையில் சொல்லியுள்ள முகவரியும், நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியும் ஒன்றுதான் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரி வாடகை வீடு தான். 20 வருடங்களாக அங்கு வாடகைக்கு குடியிருக்கிறேன். என் நிருபண வாக்குமூலத்தில் பிரதிவாதியின் மகன் திருமண செலவிற்காக பணம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மகன் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். பிரதிவாதி, வாதியிடம் முன்தொகை ரூ.50 லட்சம் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், அதற்காக கிரைய ஒப்பந்தம் ஏதும் எழுதிக்கொள்ளவில்லை என்றும் சொல்வது

சரியல்ல. என் மகன் வேலைக்கு போகாமல் இருந்தார் என்றும், ரூ.50 லட்சம் கொடுக்கும் அளவிற்கு அவருக்கு வசதியில்லை என்றும் சொல்வது சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் மற்றொரு சாட்சி ஷேக் பரித் என்பவர் போட்டுள்ளார். ஷேக் பரித் பத்திர அலுவலகத்திற்கு எப்போது வந்தார் என்றால், அவர் காலை 11.30 மணிக்கு வந்தார். பத்திரம் மதியம் 2 மணிக்கு மேல் தாக்கல் செய்யப்பட்டது. ரூ.50 லட்சம் கொடுத்ததாக சொல்லும் நிலையில், கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதியின் கணவரை ஒரு சாட்சியாக போட வேண்டும் என்று நாங்கள் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவருக்கு தான் நான் ரூ.5 லட்சம் கடன் கொடுத்தேன் என்றும், அதற்காக அடமானப்பத்திரம் எழுத வேண்டும் என்று பிரதிவாதியை வரவழைத்து அவரை படித்து பார்க்கவிடாமல் ஆவணத்தில் கையொப்பம் வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கையொப்பம் வாங்கி பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை நானும், வாதியும் சேர்ந்து ஆவண எழுத்தரிடம் விபரங்கள் கூறி தயார் செய்தோம் என்றும், பிரதிவாதி விபரங்கள் கூறியதாக பொய் சொல்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதி தான் தயார் செய்தார் என்ற விபரத்தை வழக்குரையிலோ எனது நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக கிரைய ஒப்பந்த பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொல்வது சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு ரூ.1.5 கோடி என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் அந்த சொத்தின் வழிகாட்டி மதிப்பு எவ்வளவு என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் கிரைய ஒப்பந்தம் சம்பந்தமாக பிரதிவாதியிடம் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளவில்லை என்றும், அதற்கு பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை என்றும் சொல்வது சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.09.20 17:48:26 +0530

Additional District Judge,

Dindigul.